2009 பிப்ரவரி 19]

26—

சுற்றுப்புறச்சூழல்

***32762—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து வாகனங்களால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்து வாகனங்களால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வாகனங்களால் வெளியிடப்படுகிற புகையினால் மிகப் பெரிய அளவிலே மாசு ஏற்படுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான சோதனை மையங்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், உரிய முறையிலே அவற்றையெல்லாம் சோதனை செய்து, மாசு ஏற்படாமல் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில்லை என்பதுதான் யதார்த்தமாக இருக்கிறது. ஆகவே, பொதுவான ஒரு நிலையிலே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இந்தக் காரியங்களையெல்லாம் ஒரு சடங்காகச் செய்கிறதே தவிர, உரிய முறையிலே அவற்றைச் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பது பொதுவான கருத்தாக வருகிறது. இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, மாசுபடாமல் இருப்பதற்குரிய முயற்சியை, தனித்த முயற்சியை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2009 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் மாசினைக் கட்டுப்படுத்த மத்திய மோட்டார் வாகனச் சட்டம், 1988, மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989-ல் வகுக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனச் சட்டத்தினுடைய விதிகளை அமல்படுத்தும் அதிகாரம், மாநில போக்குவரத்துத் துறை மற்றும் போக்குவரத்துக் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மத்திய மோட்டார் வாகன விதி எண் 115(2)-ன்படி ஒவ்வொரு வாகனத்திலும் புகை, நிர்ணயிக்கப்பட்ட தர அளவுக்கு உட்பட்டுக் காணப்படவேண்டுமென்ற நியதி வகுக்கப்பட்டு, அதனை உறுதி செய்ய ஒவ்வொரு வாகனமும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை புகை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு புகை தர அளவுச் சான்றிதழ் பெற வேண்டுமென்ற நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. இது தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்பட்டும் வருகிறது. இன்றைக்கு வாகன மாசைத் தவிர்ப்பதற்காக, வாகனங்களால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்த, வாரியம் அவ்வப்போது விழிப்புணர்வு பிரச்சாரங்கள், துண்டுப் பிரசுரங்கள், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வாயிலாகக் காற்று மாசு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இருக்கிற சட்ட விதிகளைச் சொல்கிறார்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், வாகனப் போக்குவரத்துமூலமாக வெளியேற்றப்படுகிற புகை மிகப் பெரிய அளவிலே, மாசு ஏற்படுத்துகிறது என்பது யதார்த்தமான உண்மை. அதிலும் குறிப்பாக, அரசுப் பேருந்துகள் என்பது மட்டுமல்ல, அரசு அலுவலகங்களில் இருக்கக்கூடிய ஜீப்புகள் மற்றும் அரசாங்கம் பயன்படுத்துகிற இதர வாகனங்களிலிருந்து வருகிற புகைதான் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதைச் சரி செய்வதற்கான முயற்சி, தனித்த முயற்சி என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி. அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் விரைந்து கவனிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

2009 பிப்ரவரி 19]

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறியுள்ளவாறு, தமிழக அரசின் ஆணையின்படி 10 ஆயிரம் புதிய எல்.பி.ஜி. ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் 33,710 பழைய ஆட்டோ ரிக்ஷாக்களை எல்.பி.ஜி. எரிபொருளுக்கு படிப்படியாக மாற்ற அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 4,921 ஆட்டோக்கள் எல்.பி.ஜி. எரிபொருளுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும், இதனை மாற்றுவதற்காக ஒவ்வொரு ஆட்டோ ரிக்ஷாவுக்கும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் 3 ஆயிரம் ரூபாய் அரசு நிதி வழங்கி, அந்த ஆட்டோக்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கின்றபோது நம்முடைய ஆட்டோ தொழிற்சங்கங்களால் நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அது நிலுவையில் இருக்கின்றது. இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் gas மூலம் ஓட்டினால் புகை குறைவாக வரும் என்ற காரணத்தினால் அரசு அதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, புகையைத் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளிலும் நம்முடைய அரசு கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. இப்பொழுது வருகின்ற பஸ்களையெல்லாம் பார்த்தால் தெரியும். போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக பாரத் தரம்-3 என்ற தரக் கட்டுப்பாட்டு அளவிற்கு இப்பொழுது 1,901 பஸ்கள் இயங்கி வருகின்றன. அதேபோல பாரத் தரம் 3 என்ற தரக் கட்டுப்பாட்டு அளவிற்குட்பட்ட ஆயிரம் புதிய பேருந்துகளையும் அரசு இயக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசு வாகனங்கள்

எல்லாம் மிகவும் அதிகமாக புகை கக்குவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில், பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையிலும் ஜீப்புகள் புதிதாக வாங்கித் தரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இருக்கின்ற வாகனங்கள் எவ்வளவு புகையைக் கக்குகின்றன என்பதைக் கணக்கெடுப்பதற்காகப் போக்குவரத்துத் துறையின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கு தனியார்கள் மூலமாக இந்தக் கணக்கெடுக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. சென்னை மாநகரத்தில் மட்டும்தான் சுற்றுச்சூழல் துறையே அதைக் கண்காணித்து வந்தது. சுற்றுச்சூழல் துறை இப்பொழுது சொல்லியிருப்பது, எங்களுக்கு அதிகமாக வேலைப் பளு இருக்கின்ற காரணத்தால் சென்னையிலும் நீங்கள் தனியாரிடம் கொடுத்து சரியானபடி கண்காணிக்க வேண்டுமென்று அவர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள் வந்திருக்கிறது. அதை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவிலே அதற்கான ஆணையை வெளியிட இருக்கிறார்கள். பொதுவாக சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அரசு இப்பொழுது புதிதாக வரும் வாகனங்கள் அனைத்துமே B.S.III, B.S.II. வாகனங்களாக—சென்னையைப் பார்த்தால் B.S.III இருக்கும். வெளியூர்களிலே இருக்கின்ற mofussil பேருந்துகள் B.S.II என்ற அளவிலே இருக்கும். எனவே, இந்த அரசு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது அரசின் பழைய வாகனங்களை—தொடர்ச்சியாகப் பார்த்தால் இப்பொழுது தெரியும். பொதுப் பணித் துறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக வாகனங்களை வழங்கி இருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதுபோல் வழங்கி இருக்கிறார்கள். பேருந்துகள் புதிதாக மாற்றப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 4 ஆயிரம், 3 ஆயிரம் பேருந்துகள் எனப் புதிதாக மாற்றிக்கொண்டிருக்கிறோம். எனவே, புகை அதிகமாக இருக்கின்ற வாகனங்கள் இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.